# பிள்ளைலோகாசார்யர் வைபவம்

கதை அமைப்பு : கீதாசார்யன் சித்திரம் : விஜயராகவன்




ஒருநாள் திருவோலக்கத்திலே பெண்ணை அழைத்துவர. அப்பெண்ணைப் பார்த்து .....
நம்மைப்போல இருப்பானொரு பிள்ளையைப் பெறக் கடவாய்!
வடக்குத் திருவீதிப் பிள்ளையைப் பார்த்து
உம்முடைய பயமும் தீர்ந்தது. உம்முடைய வைராக்யத் திற்கும் குறைவு வராது. உலக மரியாதைக்குச் சேர இன்றிரவு கூடியிரும்.
நமக்குக் குமாரன் பிறந்தால் அது தேவரீர் திருவுள்ளத்திற்கு உகப்பானால் அப்படியே செய்கிறேன்.


அதன் பின் பன்னிரண்டாம் மாஸத்தில் க்ரோதனவருஷம் ஐப்பசித் திருவோணத்தன்று வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கு ஒரு திருக்குமாரர் அவதரித்தார். பன்னிரண்டாம் நாள் நாமகரணத்தின்போது அக்குமாரருக்குத் தம்முடைய ஆசார்யருடைய திருநாமத்தையே சூட்டினார்.
அடியேன் ஆசார்யருடைய அநுக்ரஹத்தினால் பிறந்தபடியால், அவருடைய திருநாமமான லோகாசார்யர் பிள்ளை என்றே பெயர் சூட்டுகிறேன்.
நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளையை அழைத்து....
கிருஷ்ணரே! நாம் பெருமாள் திருநாமம் சாத்துவதாக நினைத்திருக்கையில் நீர் நம் பெயரைச் சூட்டிவிட்டீரே!
தேவரீர் திருநாமம் சாத்த வேண்டும் என்ற ஈடுபாட்டாலே அப்படிச் செய்துவிட்டேன். க்ஷமித்தருள வேணும்.
ஓஹோ! அப்படியானால் பெருமாள் திருநாமத்தைச் சாத்துவதற்காக உமக்கு இன்னும் ஒரு குமாரர் பிறக்கும்படி ஆசீர்வதிக்கிறேன்.


அவர் ஆசீர்வாதப்படி பிள்ளைலோகாசார்யருக்கு ஒரு திருத்தம்பியார் அவதரிக்க, அவருக்கு அழகியமணவாளப்பெருமாள் (நாயனார்) என்று பெருமாள் திருநாமத்தை நம்பிள்ளை சாத்தியருளினார். இருவருக்கும் வடக்குத் திருவீதிப் பிள்ளை பிராப்த காலங்களில் உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்வித்து, நம்பிளையிடம் அழைத்துச் சென்றார்......
இக்குமாரர்கள் ஆழ்வார்கள் அருளிச் செயல்களிலும் ரஹஸ்யங்களிலும் வல்லவர்களாகும்படி கடாக்ஷம் பண்ண வேணும்.
இவர்களைச் சாதாரணமானவர்களாக எண்ண வேண்டாம். இவர்கள் லௌகிக வாழ்க்கையில் பற்றற்றவர்களாகவே இருக்கப் போகிறார்கள். மிக மிக உயர்ந்த நூல்களை இவர்கள் எழுதுப் போகிறார்கள். இவர்களால் ஸ்ரீவைஷ்ணவ உலகம் பேருபகாரத்தை அடையப்போகிறது.
அப்படியா! வளர்த்ததனால் பயன் பெற்றேன். தேவரீர் க்ருபையே அன்றோ எல்லாவற்றிற்கும் காரணம்!
நீரும் இவர்களுக்கு பகவத்விஷயம், ஸ்ரீபாஷ்யம் முதலான கிரந்தங்களை காலக்ஷேபம் ஸாதித்துவாரும்.


நம்பிள்ளையின் திருவாக்குப்படியே நம்பிள்ளைக்கும், வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கும் பிறகு, ஸ்ரீவைஷ்ணவ தர்சனத்தின் ஓராண்வழி ஆசார்யஸ்தானத்தைப் பிள்ளைலோகாசார்யர் அடைந்தார். அவரிடம் திருப்புட்குழிஜீயர், கூரகுலோத்தமதாஸர், திருக்கண்ணங்குடிப் பிள்ளை, விளாஞ்சோலைப் பிள்ளை, நாலூர்பிள்ளை போன்ற பலர் ஆச்ரயித்தனர்.
இன்னும் பல்லாயிரவரும் பிள்ளைலோகாசார்யரின் கடாக்ஷத்திற்குப் பாத்திரமாகி, ஸகலார்த்தங்களையும் அறிந்து கொண்டு பொழுதுபோக்கினர்.
ஒருநாள் காஞ்சீபுரத்தில் மணப்பாக்கத்து நம்பி என்பவருடைய கனவில் தேவப்பெருமாள் ஸேவை ஸாதித்து, சில விசேஷ அர்த்தங்களை அருளிச்செய்து.....
உமக்குத் தஞ்சமாயிருப்பன சில அர்த்தங்களையே சொன்னோம். நீர் போய் திருவரங்கத்தில் வசித்துவாரும். மேலும் அர்த்தங்களை நாம் அங்கே உமக்கு உபதேசிக்கிறோம்.

தேவப்பெருமாள் திருவுள்ளப்படி திருவரங்கம் சேர்ந்த மணப்பாக்கத்து நம்பி, தமக்குத் தேவப் பெருமாள் அருளிச்செய்த அர்த்தங்களை ஒருவரும் அறியாதபடி அநுஸந்தித்துக் கொண்டு ஏகாந்தமான ஒரு (காட்டழகியசிங்கர்) கோயிலிலே வசித்துவர, அவ்விடத்திற்கு எழுந்தருளிய பிள்ளை லோகாசார்யர் அவ்விடம் ஏகாந்தமாக இருக்கக் கண்டு, சில ரஹஸ்யார்த்தங்களைத் தம்முடன் வந்த சிஷ்யர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார். அவை ஏற்கெனவே தேவப் பெருமாள் தமக்கு அருளிச்செய்த ரஹஸ்யார்த்தங்களாகவே இருப்பதைக் கேட்ட மணப்பாக்கத்து நம்பி, உள்ளிருந்து வெளியே வந்து, பிள்ளைலோகாசார்யர் திருவடிகளில் விழுந்து வணங்கி .......




பிள்ளையும் மணப்பாக்கத்து நம்பியை அபிமானித்தருளி, அவருக்கு அர்த்த விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் நம்பியுடைய கனவிலே தேவப்பெருமாள் தோன்றி, இவ்வர்த்தங்கள் பிற்காலத்தவர்களுக்கும் பயன்படும்படி ஒரு நூலாக எழுதச் சொல்லி நியமித்தார்.
நேற்று தேவப்பெருமாள் அடியேன் கனவில் தோன்றி, தேவரீர் சொல்லிவரும் அர்த்தங்கள் மறைந்து போகாதபடி ஒரு கிரந்தமாக எழுதி வைக்கச் சொல்லி நியமித்தருளினார்.
அப்படியே செய்வோம். முன்னோர்கள் வசனங்களையே, கொண்டு இந்நூலை எழுதி ஸ்ரீவசனபூஷணம் என்றே இதற்குத் திருநாமமிடுவோம்.
பிள்ளைலோகாசார்யரும் அவர் திருத்தம்பி அழகியமணவாளப் பெருமாள் நாயனாரும் லௌகிக வாழ்க்கையில் விரக்தியுடன் திருமணம் செய்துகொள்ளாமல் நைஷ்டிக ப்ரம்மசாரிகளாகவே திகழ்ந்தனர். பகவத் பாகவத விஷயங்களிலேயே போது போக்கினர். அழகியமணவாளப்பெருமாள்நாயனார் ஆசார்யஹ்ருதயம் எனும் நூலை அருளினார்.
அடியேன் ஆசார்ய ஹ்ருதயம் என்ற கிரந்தத்தை எழுதியிருக்கிறேன். கடாக்ஷிக்க வேணும்.
வகுளபூஷண சாஸ்த்ர ஸாரம்தானே! இங்கே கொடும் பார்ப்போம்!
கடாக்ஷித்துவிட்டு, 'வளர்த்ததனால் பயன் பெற்றேன்' என்று அதிஸந்தோஷத்துடன் கட்டித் தழுவினார்.

பின் பல்லாண்டுகாலம் பிள்ளையும் நாயனாரும் வாழ்ந்திருந்து பல நூல்களை இயற்றி ஸ்ரீவைஷ்ணவ தர்சனத்தை ப்ரகாசப்படுத்தி வந்தனர். பிள்ளைலோகாசார்யர் ஓராண் வழியாக வந்த பல ரஹஸ்யார்த்தங்கள் மறைந்து போகாதபடி கிரந்தங்களாக எழுதி வைத்தார். தம் பரமக்ருபையாலே பெண்ணும், பேதையும் அறியும்படி பதினெட்டு ரஹஸ்ய க்ரந்தங்களையும் மற்றும் பல நூல்களையும் அருளிச்செய்தார்.




அழகியமணவாளப்பெருமாள் நாயனார் திருப்பாவைக்கும் கண்ணிநுண்சிறுத்தாம்புக்கும் வியாக்கியானம் செய்தருளினார். தமையனாரான தாம் வாழ்ந்திருக்கும் காலத்திலேயே அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் பரமபதித்தது பிள்ளை உலகாரியருக்கு மிகுந்த சோகத்தை உண்டாக்கியது.




பிள்ளைலோகாசார்யர் நூற்றுப் பதினெட்டு திருநக்ஷத்ரத்தை அடைந்தார். ஒருநாள் காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டிருந்தபோது ஸ்ரீவைஷ்ணவர் ஒருவர் ஓடி வந்து.......
ஸ்வாமீ! ஆபத்து! ஆபத்து!! யாரோ துருஷ்க தளபதியாம்! பெரும் படைகளுடன் வருகிறானாம்! வழியில் உள்ள கோயில்களிலெல்லாம் புகுந்து விக்ரகங்களை உடைக்கிறானாம்! திருவாபரணங்களைச் சூறையாடுகிறார்களாம்! திருவரங்கத்தை நெருங்கி விட்டார்களாம்!
இது என்ன அக்ரமம்! அவர்களைத் தடுப்பவர்களே இல்லையா?
இப்பொழுது எங்கு இருக்கிறார்கள்? திரு அரங்கத்திற்குள் நுழைந்து விட்டார்களா என்ன?
ஸ்வாமீ! இது என்ன சோதனை? இப்போது என்ன செய்வது? நம் பெருமாளை இந்த வெறிக் கூட்டத்திடமிருந்து ரக்ஷிப்பது எப்படி?


ஸ்ரீவைஷ்ணவர்களே! எம்பெருமானின் லீலைகளில் இதுவும் ஒன்று. பதட்டப் படாமல் அதிவிரைவாகக் காரியங்களை மேற்கொள்ள வேண்டும். நாம் இரண்டு ஆற்றுக்கு நடுவில் உள்ளதால் அவ்வளவு சீக்ரமாக அவர்களால் இங்கு வரமுடியாது.
ஸ்வாமீ! இந்த ஆபத்தான சமயத்தில் தேவரீர் எழுந்தருளியிருப்பது எங்களுடைய அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். தேவரீர் காட்டும் வழியில் நாங்கள் செல்லத் தயாராக இருக்கிறோம். நம்பெருமாளுக்காக உயிரையும் நாங்கள் விடத்தயாராக இருக்கிறோம்.
அவசரப்படாதீர்! அந்த வெறிக் கூட்டத்தைத் தடுத்து நிறுத்த நம்மாலாகாது. நம்பெருமாள் நம் எல்லோரையும் ரக்ஷிப்பார். ஆயினும் அதிவேகமாக நாம் காரியங்களைச் செய்ய வேண்டும். முதலில் பெரிய பெருமாளை அவர்கள் கண்ணில் படாமல் மறைக்க வேண்டும். அதற்காக சன்னிதி முன் கற்சுவர் கட்ட வேண்டும். பிறகு நம்பெருமாளையும் நாச்சிமார்களையும் பல்லக்கில் எழுந்தருளச் செய்து விரைவாகத் திருவரங்கத்தை விட்டு வெளியேறுவது ஒன்றுதான் வழி.
ஸ்வாமி சொல்வதே சரியான ஆலோசனை. அவர்களுடன் போராடி நம் உயிரை மாய்த்துக் கொள்வதால் பெருமாளைக் காப்பாற்ற முடியாமல் போகலாம்.
இனி என்ன யோசனை? உடனே ஆசார்யஸ்வாமி சொல்வதை நிறைவேற்றத் தொடங்குவோம்.


பிள்ளைலோகாசார்யரின் மேற்பார்வையில் காரியங்கள் வெகு வேகமாக நடைபெற்றன. கர்ப்ப க்ருஹத்தில் மூலவர் பெரியபெருமாளுக்கு முன்பாக கற்சுவர் கட்டப் பட்டது. ஊர் முழுவதும் ஒரே பதட்டம் நிலவியது.
ரங்கா! இது என்ன சோதனை?
சீக்ரம். அவர்கள் வருவதற்குள் நாம் வெளியேற வேண்டும்.
இதோ முடிந்துவிட்டது ஸ்வாமீ!
துருஷ்க. வெறியர்களின் படையெடுப்பு பற்றிய பயங்கரங்கள் பரவப் பரவ, திருவரங்கம் பரபரப்பை அடைந்தது. பிள்ளைலோகாசார்யர் தம் சீடர்களுடனும், கைங்கர்யபரர்களுடனும் நம்பெருமாளை நாச்சிமார்களுடன் பல்லக்கில் எழுந்தருளப்பண்ணிக் கொண்டு, விரைவாக ஸ்ரீரங்கத்தைவிட்டு வெளியே பயணமானபோது திருவரங்கமே கண்ணீர்க்கடலில் மூழ்கியது.


காட்டு வழியில் சென்றபோது ஏராளமான தொல்லைகளை எதிர் கொண்டனர். கள்ளர்கள் நம்பெருமாளின் திருவாபரணங்களைக் கொள்ளை கொண்டனர். பிள்ளைலோகாசார்யர் அங்கே வந்து தம்முடைய உடைமைகளையும் தாமே அவர்களிடம் கொடுத்து நம்பெருமாளைக் கள்ளர்கள் அபகரிக்காமல் காப்பாற்றினார். வேறொரு கள்ளர் கூட்டத்தார் ஸ்வாமியை ஸேவித்து, தங்களிடமிருந்த திரவியத்தை ஸமர்ப்பிக்க முயல, தீய வழியில் ஈட்டிய பொருள்களைப் பெருமாள் விரும்பமாட்டார் என்று கூறி மறுத்து, யாத்திரையைத் தொடர்ந்தார்.
நாம் இப்படிப் புறப்பட்டது நம்மிராமானுசன் ப்ரதிஷ்டை செய்த திருநாரணனையும், அவரிடம் சங்காழி பெற்ற திருவேங்கடவனையும் காண அன்றோ!
சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான்; உம்மைக் காக்கும் வழியை இனி நீரே தேடிக் கொள்ளவேணும். அடியேனுக்கு மோக்ஷ ப்ராப்தி அருள வேணும். தேவரீர் அதி சீக்ரமாகவே திருவரங்கம் திரும்பவேணும்.
ஜோதிஷ்குடி என்கிற கிராமத்தை நம்பெருமாள் அடைய நேர்ந்த போது, பிள்ளைலோகாசார்யருடைய உடல் மிகவும் தளர்ச்சி அடைந்து விட்டது. 118வயதுடைய அவர் இனிமேலும் பெருமாளைத் தொடரமுடியாது என்ற நிலையை அடைந்தார். பெருமாளைத் திருவடி தொழுது பிரார்த்தித்தார்.


நம்பெருமாள் அர்ச்சகமுகேன பிள்ளைலோகாசார்யருக்கு ஸமாதானம் கூறினார்.
உலகாரியரே! நீர் தொடர்ந்து எழுந்தருளவேண்டாம். உமக்கும் உம்மோடு தொடர்பு உடையவர்கள் எல்லோருக்கும் நாம் திருநாடு தந்தோம்.
தமக்கும் தம்மோடு தொடர்பு உடையவை அனைத்திற்கும் வீடுபேறு அருளுவதாகக் கூறியபின்னர் பிள்ளைலோகாசார்யர் அருகிலிருந்த மரம் முதலியவைகளைத் தம் கையால் தடவியும் தூரத்திலிருந்த பொருள்களைத் தம் கண்களால் நோக்கியும், ஸ்ரீவைஷ்ணவர்களையும் மற்றவர்களையும் கடாக்ஷித்தும் தம்மோடு தொடர்பு உண்டாகும்படி செய்து, அவர்களும் வீடுபேறு அடைய வழிசெய்தார்.


பிள்ளைலோகாசார்யருடைய சரமதசையில் அவருடைய சிஷ்யர்கள் கூடி...
தேவரீருக்குப் பிறகு இந்த தரிசனத்தை நிர்வகிப்பார் யார்? எங்களுக்குத் தஞ்சமான வார்த்தைகளை அருளிச்செய்ய வேணும்.
கூரகுலோத்தம தாஸரே! சிறுவயதில் நம்மை ஆச்ரயித்து, தற்போது வைதிக லௌகிக கார்யங்களில் அதி நிபுணராய், மதுரையில் மந்திரியாய் அரசாண்டு வருகிற திருமலை ஆழ்வாரைத் திருத்தி நம் தர்சனப்ரவர்த்தகராக ஆக்க வேண்டும்.
விளாஞ்சோலைப் பிள்ளை கடைசிக்காலம் வரை திருவனந்தபுரத்தில் வசித்து, ஸ்ரீவசன பூஷண அர்த்தங்களை திருமலையாழ்வாருக்கு உபதேசிக்கட்டும்.
மற்ற ரஹஸ்யார்த்தங்களை கூரகுலோத்தம தாஸரும், திருவாய்மொழியை திருக்கண்ணங்குடிப் பிள்ளையும், அதன் விசேஷார்த்தங்களைத் திருப்புட்குழி ஜீயரும், மூவாயிர வியாக்கியானங்களை நாலூர் பிள்ளையும் திருமலையாழ்வாருக்கு உபதேசித்து தர்சனப்ரவர்த்தகராக ஆக்க வேண்டும்.
வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவடிகளை தியானித்துக் கொண்டு, ஆனிமாத சுக்லத்வாதசியில் பிள்ளைலோகாசார்யர் திருநாட்டுக்கெழுந்தருள, பெருமாள் திருப்பரிவட்டம் மாலை ப்ரஸாதங்களை வரவிட, அங்கேயே ஸம்ஸ்கரித்து திருப்பள்ளிப் படுத்தி, திருவத்யயனத்தை நடத்தினார்கள். இவ்வாறு அரங்கனைக் காக்கத் தம் இன்னுயிரை ஈந்தார் பிள்ளைலோகாசார்யர்.